mine cut in Neyveli project. I would like to know from the Hon. Minister what is the date on which such request was sent to the Central Government? If the Central Government has not so far sent any reply to the request of the State Government, what is the safety method that is being adopted by the State Government to expedite the matter to prevail upon the Central Government about the essentiality of starting the same as soon as possible?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: எப்போது என்ற விவரம் இல்லை. பலமுறை எழுதப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் எந்தெந்தத் தேதிகளில் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொல்ல முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு முறையும் டில்லிக்குச் செல்லும்போது இதைப்பற்றி எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

சிமிட்டி கற்கலவைத் தூண்கள் தயாரிப்பு

* 79 **வினா—திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சாரத் துறைக்கு வேண்டிய கான்கிரீட் கம்பங்கள் மின்சாரத் துறையிலேயே உற்பத்தி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், ஓராண்டிற்கு அது உற்பத்தி செய்யும் கம்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) 1971-72 முடிய கடந்த 5 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு துறையின் வார்ப்படக்கூடங்களில் கீழ்க்கண்ட சிமண்ட் கற்கலவைத் தூண்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

1967–68—1,88,624.

1968–69—2,08,881.

1969–70—2,10,185.

1970–71—2,68,635.

1971–72—3,51,028.

திரு. நா. வீராசாமி: நம்முடைய அரசு இந்த ஆண்டுக்குள்ளாக தமிழகம் எங்கும் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற திட்டத்தை வைத்திருக்கும் நேரத்தில் மின்சார இலாகா இன்னும் நிறைய இப்படிப்பட்ட கம்பங்களைத் தயாரிக்க வேண்டிய நிலையில் அந்த இலாகாவுக்கு கம்பிகள் கிடைக்காத

காரணத்தால் அந்தப் பணியின் வேகம் குறைவாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி கம்பிகள் தேவையான அளவு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதற்காக அதிகமான இரும்பு ஒதுக்க வேண்டுமென்று அரசின் மூலம் கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த மின்சாரத் துறைக்குத் தேவையான கான்கிரீட் கம்பங்களை துறையே உற்பத்தி செய்வதாகச் சொன்னார்கள். அதுவே போதுமானதாக இருக்கிறதா அல்லது வெளியே காண்டிராக்டர்களிடமிருந்தும் வாங்கப்படுகிறதா? அப்படி வெளியே வாங்கப்படுவதாக இருந்தால் எத்தனை சதவிகிதம் வாங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : துறை உற்பத்தி செய்வது போதாமல் டெண்டர் மூலம் வெளியாருக்கும் விடப்பட்டது. முதலில் 3,08,095 கம்பங்களைத் தயாரிக்கவும், அடுத்து 1,08,000 கம்பங்களைத் தயாரிக்கவும் தனியார் துறைக்கு விடப்பட்டது. இரும்பு விலை அதிகமான காரணத்தால் அவர்கள் தொகையை ஏற்றித் தர வேண்டுமென்று சொன்னார்கள். அதை போர்டு ஏற்றுக் கொள்ளாமல் இப்போது வாரியமே வேண்டிய கம்பங்களைத் தயாரிக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நாட்டில் இன்னும் சில பகுதிகளில் கான்க்ரீட் கம்பங்களுக்குப் பதிலாக சவுக்கு மரக் கம்பங்கள் நடப்பெற்றுள்ளன. பத்தாண்டுக் காலத்தில் அவை இற்று விழக்கூடிய அபாயம் இருக்கின்ற காரணத்தால் எல்லா இடங்களிலும் கான்கிரீட் கம்பங்களை மட்டும்தான் பயன்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது மரக் கம்பங்களை நடுவது கிடையாது. முன்னால் நடப்பெற்ற மரக் கம்பங்கள் பழுதடைந்து விட்டிருக்குமானால் அவற்றுக்குப் பதிலாக கான்கிரீட் கம்பங்கள் நடப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து பாதிக்குப் பாதி கம்பங்கள் போதவில்லை என்பது புரிகிறது. இன்னும் மூன்று லட்சம் கம்பங்களைத் தயாரிப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இதிலே காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் ஆங்காங்கே கம்பங்கள் விழுந்து விடும் அளவுக்கு மோசமான நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதற்காக துரிதத் திட்டத்தை மேற்கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பாதிக்குப் பாதி போதவில்லை என்று சொல்லவில்லை. கான்கிரீட் கம்பங்களைத் தயாரிக்க ஒப்பந்தக்காரர்கள் முன் வராத காரணத்தால் போர்டே அந்தக் கம்பங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. தயாரிக்கும் ஏற்பாடுகள் ஓரளவு முடிந்து போதுமான அளவு உற்பத்தியும் செய்திருக்கிறார்கள்.

வனத்துறை நிலங்களில் பருப்புவகை பயிரிடுதல்

* 80 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள வனத்துறை நிலங்களில் துவரை, கொள்ளு பயிரிடும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலங்களில் பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வனத் துறையின் முந்திரித் தோட்டங்களின் இடைவெளியில் துவரை, கொள்ளு ஆகிய பருப்பு வகைகளைப் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) 1972-73-ம் ஆண்டு சுமார் 200 ஏக்கர்களில் முந்திரி தோட்டங்களின் இடைவெளியில் துவரை, கொள்ளு முதலியன பயிரிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

சென்னை விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை மூடப்பட்டதும், தொழிலாளரின் அல்லலும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை விதி 42-இன் கீழ் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்—

" the serious situation caused by the inaction of the Government in the WIMCO Match Factory, Madras and failure of the Government to arrange to lift the lock-out causing undue hardship to thousands of workers ".